
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 07 AUGUST 2024
ஆண்டு சந்தா 100/– தனிப்பிரதி 10/–




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்
WWW.JESUSLIVES.IN

செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

**09**
ஆகஸ்ட் 2024
2வது வெள்ளி

**10**
ஆகஸ்ட் 2024
2வது சனி



தேவ செய்தியாளர்கள் **Bro.L.Vincentraj Sis.Kala Vincentraj**

காலை 9.30 மணி முதல் 2.30 மணி வரை

வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல்

தொடர்புக்கு : 94 98 000 449, 944 28 00 449

---

மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்

மதுரையில்

# எழுப்புதல் உபவாச ஜெபம்



**17** ஆகஸ்ட் 2024
மூன்றாவது
சனிக்கிழமை

காலை 9.30 மணி முதல் 2.30 மணி வரை

இடம் : இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்
PRC Depot அருகில்,
மதுரை

சகோதரர். L.வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலாவின்சென்ட்ராஜ்

தொடர்புக்கு : 94 98 000 449
944 28 00 449



# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். **ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.** சங்கீதம் 136:4 இந்த வார்த்தையின்படி இந்நாட்களில் கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களை செய்து, நம்மை அற்புதமாய் நடத்தினார், இனிமேலும் நடத்துவார், தேவனுடைய பிரதான கிருபையினால் ஒவ்வொரு காரியங்களிலும், ஒவ்வொரு ஊழியத்திலும் கர்த்தர் நமக்கு அற்புதமாய் நடத்தி வருகிறதை நாம் பார்க்க முடிகிறது. கடந்த நாட்களில் நடைபெற்ற ஒவ்வொரு கூட்டங்களிலும் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தினார். செம்பட்டியில் நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார்.

திரளான மக்களை தேவன் கூட்டி சேர்த்து, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த கிருபை செய்தார். சகோதரர். ஜான்சாம் ஜாய்சன் அவர்களை தேவன் வல்லமையாக எடுத்து பயன்படுத்தினார். இன்னும் நம்முடைய சோசியல் மீடியாவில் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சியின் மூலமாகவும், இயேசுவை தினம் பார்க்கிறேன் என்ற நிகழ்ச்சியின் மூலமாகவும் தேவன் அநேகரை ஆசீர்வதித்து வருகிறார் அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுவோம். கர்த்தருடைய வல்லமை இன்னும் அதிகமதிகமாக இந்த ஊழியத்தின் மூலம் வெளிப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். வருகிற செப்டம்பர் மாதம் 5,6,7 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிற திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாமிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து தேவனுடைய காரியங்களில் அதிகமாக ஈடுபடவும், கர்த்தருடைய சித்தத்தை கருத்தாய் செய்து முடிக்கவும் எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய உதாரணத்துவமான காணிக்கையினாலும், ஜெபத்தினாலும் இந்த ஊழியத்தை தாங்க மறவாதீர்கள். தேவனுடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

*இயேசுவின் பணியில்*

**L.வின்சென்ட்ராஜ்**



# வேதனை நீங்கி சுகமாயிரு...

சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மாற்கு 5:34 அவர் அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத் தோடேபோய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார். 12 வருட பெரும்பாடுள்ள பெண் தன்னிடம் இருந்த பணத்தை எல்லாம் செலவழித்தும் மருத்துவர்களால் அவளை சுகப்படுத்த முடியவில்லை. மிகுந்த மனவேதனையில் இருந்தபோது இயேசுவிடத்தில் போனால், அற்புதம் நடக்கும் என்று கேள்விப்பட்ட அந்த பெண் இயேசுவின் உடையை, வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட்டால் போதும் என்று விசுவாசத்தோடு வந்தால், அவரைத் தொட்டாள் அற்புதம் நடந்தது. இயேசு அந்த பெண்ணைப் பார்த்துச் சொன்னார் மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடு போய், உன் வேதனை நீங்கி சுகமாய் இரு என்றார்.

பல வருடங்களுக்கு முன்பாக நாங்கள் பெங்களூர் பட்டணத்திற்கு ஊழியத்திற்காக போய்க் கொண்டிருந்தபோது புதுசத்திரம் என்ற இடத்தில் போகும்போது எதிராக வந்த மணல் லாரி எங்கள் காரில் மோதி விட்டது, நாங்கள் தூக்கி எறியப் பட்டோம். எனக்கு பலமான அடி கழுத்து எலும்பு உடைந்தது. அந்த வலி தாங்க முடியாமல் நான் மயக்கம் அடைந்தேன், சுயநினைவை இழந்தேன். சரீரத்தில் ஒரு சின்ன வலி, வேதனை வந்தாலே மனிதன் சுயநினைவை இழந்து விடுகிறான். ஆப்ரேஷனுக்கு ஏன் மயக்க மருந்து கொடுக்கிறார்கள் வலி தெரியாமல் இருக்கத்தானே. ஆனால் தற்போது (பெயின் கில்லர்) வலி மாத்திரைகள் எடுத்தால், சாப்பிட்டால் கிட்னி பாதிப்படைகிறது என்று சொல்லுகிறார்கள். நம் சரீரத்தில் வலி வந்தால் எவ்வளவு வேதனையாக உள்ளது. ஆனால் இந்த உலகத்தில்

அநேகர் எத்தனையோ வைத்தியம் பார்த்தும் வியாதி தீர்ந்த பாடு இல்லை, வலி வேதனை நீங்கவும் இல்லை என்று வேதனையில் துடிக்கிறார்கள்.

ஒரு சகோதரர் வெளிநாட்டில் வேலை செய்கிறார். இவருக்கு மூன்று பிள்ளைகள், இவர்கள் படிப்பு, எதிர்கால வாழ்க்கைக்காக வெளிநாட்டில் போய் கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறார். ஆனால் இரண்டாவது மகள், அவள் விருப்பம் போல திருமணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள். அந்த தகப்பன் மனம் உடைந்து போனார் இவர்களுக்காகத் தானே நான் வெளிநாட்டில் கஷ்டப்படுகிறேன். இவள் இப்படி செய்து விட்டாளே என்று வேதனையில் துடித்தார். ஆம் நாமும் பிள்ளைகளைக் குறித்து ஒரு விருப்பம், திட்டம் வைத்திருப்போம். ஆனால் அவர்கள் சுயமாய் முடிவெடுக்கிறார்கள். வேதனை நிறைந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இயேசு சொன்னார் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று. நான் ஜெபித்து என்னத்தை கண்டேன், எதற்கு ஆண்டவரை நேசிக்க வேண்டும் என்று சாத்தான் ஒவ்வொருவரையும் திசை திருப்புகிறான், இருளுக்குள் நடத்துகிறான், வேதனையை பெருகப் பண்ணுகிறான். கர்த்தர் மேல் நம்பிக்கையை இழக்கச் செய்கிறான். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் வேதனைப் படுவது தேவனுடைய விருப்பம் அல்ல. அவர் தாமே நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, துக்கங்களை, வேதனைகளையும் அவர் சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார். எனவே நம்முடைய வலி வேதனைகள் அவருக்குத் தெரியும். எவ்வளவு உழைத்தும் குடும்பத்தை முன்னேற்ற முடியவில்லை, பொருளாதாரப் பிரச்சனை, பற்றாக்குறை உள்ளது, கடன் நெருக்கடி, சஞ்சலம் தான் என் வாழ்க்கையில் உள்ளது என்று நினைக்கிறீர்களா? கலங்காதீர்கள் தேவன் உங்கள் நிலையை மாற்றுவார். உங்கள் வலி வேதனை முற்றிலும் மாறும்.

யாத். 3:7-ல் அப்பொழுது கர்த்தர், எகிப்தி லிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந் திருக்கிறேன். இஸ்ரவேல் ஜனங்கள் 430 வருஷம் எகிப்திலே மிகவும் வேதனைப் பட்டார்கள். நல்ல சாப்பாடு கிடையாது, சம்பளம் கிடையாது, செங்கல் அறுக்க வேண்டும். மிகவும் நெருக்கப்பட்டார்கள் அவர்களுக்கு வாழ்க்கையே கசப்பானது. ஏன் வாழ வேண்டும் என்று நினைத்தார்கள். பார்வோனால் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். ஒரு வேதனை என்றால் ஒருவரோடு முடியவில்லை, அவர்கள் தலைமுறையே சேர்ந்து கஷ்டப்பட்டார்கள். இவர்களுடைய வேதனையை அறிந்த, பார்த்து விடுதலை தந்த தேவன், உங்களுடைய சரீர வலியா? மனவலியா? ஆத்துமா வலியா? எதுவாயிருந்தாலும் அதிலிருந்து உங்களை விடுதலையாக்குவார். கர்த்தர் உபத்திரவபடுத்துகிற வர்களின் நிமித்தம், வட்டி வாங்குகிறவர்களின் நிமித்தம், ஒடுக்குகிறவர்களின் நிமித்தம் நீங்கள் இடுகிற கூக்குரலை கேட்டேன், நீங்கள் படுகிற வேதனையை அறிந்திருக்கிறேன் என்கிறார்.

நீங்கள் நினைக்கலாம் என் வேதனை யாருக்கும் தெரியலேயே, ஒரு மருத்துவர் வந்து மாத்திரைக்கு பதிலாக என் வேதனையை, வலியை சுமந்தால் நன்றாக இருக்கும் என்கிறீர்களா. யோபு 17:3-ல் அவர் சொல்லுகிறார் தேவரீர் என் காரியத்தை மேல் போட்டுக்கொண்டு, எனக்காகப் பிணைப்படுவீராக, வேறே யார் எனக்குக் கைகொடுக்கத்தக்கவர்? தேவரீர் எனக்காக பிணைக்கப்படுவீராக என்றும், எனக்கு உண்மை விட்டால் வேறு யாரும் இல்லை, நான் ஒரு அனாதை, நாடோடி, இந்த வலியை என்னால் தாங்க முடியவில்லை. கொப்பளங்கள் வெடித்து சிதறுகிறது. நீர் எனக்காக பிணைப்படுவீராக என்று யோபு கண்ணீரோடு ஜெபிக்கிறார். ஆண்டவர் அவர் வேதனையை மாற்றி, சிறையிருப்பை மாற்றினார். இன்றைக்கு அந்த தேவன் உங்கள் வேதனையை மாற்றுவார். உங்கள் வேதனை என்ன? ஏன் தூங்க முடியவில்லை, ஏன் இழப்பு, யாரை நம்பி இருக்கிறீர்கள். அவர்கள் உங்களை கைவிட்டு விட்டார்களா? சங்கீதக்காரன் சொல்லுகிறார் வேதனைப்பட்டேன் ஒடுங்கிப் போனேன் துக்கத்தோடு நாள் முழுவதும் திரிகிறேன் என்று சொல்லுகிறார். நம்முடைய வேதனைகளை, வலிகளை அவர் பார்த்துக்கிட்டேதான் இருக்கிறார். வேதனைப்படுகிறதற்கு ஒரு காலம் வந்தால், அந்த வேதனையை மறக்க ஒரு காலம் உண்டு.

## மனிதர்களால் வேதனை

யோசேப்பு வாழ்க்கையை பாருங்கள் அவன் நாடு கடத்தப்பட்டான். உடன் பிறந்தவர்களால் 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான் சில சகோதரர்கள் இருக்கிறார்கள் எப்படியெல்லாம் சகோதரன் சொத்தை

அபகரிப்பது, தங்கள் பெயருக்கு மாற்றுவது என்று திட்டமிடுவார்கள். யோசேப்பு, ஏன் என்னை குழியில் தள்ளுகிறீர்கள் என்று அழுது இருப்பான். அதில் ஒருவன் இரக்கப்பட்டு தூக்கி எடுத்தான். எகிப்திலே போய் போத்திப்பார் வீட்டில் இரவும் பகலும் வேலை செய்தான். அங்கும் பொய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டன். சிறையில் இருந்தாலும் தேவனை சார்ந்து நின்று ஜெபித்தான், தேவன் அவனோடு இருந்தார். இந்த ஒரு மனிதனை உயர்த்தும்படி பார்வோனுக்கு சொப்பனத்தை வர வைத்தார். ஏழு வருடம் செழிப் பாகவும், ஏழு வருடம் பஞ்சத்தைக் கொடுத்து அந்த தேசத்தில் யோசேப்பை உயர்த்தினார். நான் சஞ்சலப்பட்ட தேசத்தில் என் வருத்தங்கள், என் சஞ்சலங்கள், என் துக்கங்கள் எல்லாம் தேவன் மறக்கும்படி எனக்கு மனாசே என்ற பிள்ளையைக் கொடுத்தார். மனாசே என்றால் என் சஞ்சலத்தை மாற்றுகிறவர் என்று அர்த்தம். அந்த தேவன் இன்றைக்கு நீங்கள், நாம் போகும் பாதையை, அலைச்சல்களை அறிந்திருக்கிறார். நம் கண்ணீரைத் துருத்தியில் வைத்திருக்கிறார். நம் பாடு கள், வேதனைகள், போராட்டங்கள் அவருக்கு தெரியும். அவர் நம்முடைய சஞ்சலத்தை மாற்றுவார்.

அன்னாளின் வாழ்க்கையை பாருங்கள் பிள்ளை இல்லை என்ற வேதனை. அன்னாளின் சகோதரி அவளுக்கு பிள்ளை இல்லை என்று வேதனைப் படுத்தினால், இன்றைக்கு நம்மை பார்த்து மற்றவர்கள் சொந்த வீடு இருக்கா? நிரந்தரமான வருமானம் இருக்கா? சொத்து இருக்கா? சொந்த தொழில் இருக்கா? உன் பிள்ளைக்கு எவ்வளவு நகை போடுவாய் என்று கேட்கிறார்கள். அவர்கள் கண்கள் முன்பாக தேவன் நம்முடைய சஞ்சலத்தை மாற்றுவார். ஒரு அற்புதத்தை செய்வார், வேதனையை நீக்குவார். உங்கள் வேதனை அவருக்கு தெரியும், வலிகள் அவருக்கு தெரியும், நீங்கள், உங்கள் பிள்ளைகளை கரை சேர்ப்பததைக் காட்டிலும், அவர் உங்கள் பிள்ளைகளை மேன்மையாக கரை சேர்த்திடுவார். நீதி 10:22-ல் கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும், அதனோடே அவர் வேதனையை கூட்டார். கர்த்தர் ஆசீர்வதித்தால் அதில் வேதனை இல்லை. நமக்காக பணம் சேர்த்தால், அதற்காகவே ஓடி ஓடி உழைத் தால், அலைந்தால் நமக்கு வேதனை வரும்.

## அந்நிய தேவர்களைப் பின்பற்றினால் வேதனை

சங்கீதம் 16:4-ல் அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்; அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன். தேவனை மறந்து மற்றவைகள் மேல் நம்பிக்கை வைக்கும் போது நமக்கு வேதனை வரும். நாம் ஆராதிக்கும் தேவன் முட்டை, பால் கேட்பவர் அல்ல. நம் இருதயத்தை அவரிடம் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அப்படி அவரிடம் இருதயத்தை கொடுக்கும்போது நம் வாழ்வில் சமாதானத்தை கொடுப்பார். உங்கள் கணவரின் குடிப்பழக்கத்தை மாற்றுவார், கள்ள உறவுகளிலிருந்து விடுதலை ஆக்குவார். நம்முடைய சுபாவத்தை மாற்றுவார். சிலருக்கு பணம் தான் வாழ்க்கையாக இருக்கும். எப்பொழுதும் பணம் பணம் என்று அலைவார்கள். குடும்பத்தை நேசிக்க அவர்களுக்கு நேரம் இருக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு வேதனை பெருகும் என்று வேதம் சொல்லுகிறது.

நாம் ஒரு ப்ளான் போட்டு வைத்துக்கொண்டு ஆண்டவரே எனக்கு இதை நிறைவேற்றி தாங்க என்று கேட்கக் கூடாது. உன் வழிகள் என் வழிகள் அல்ல, உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல என்று வேதம் சொல்லுகிறது. உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவி, அவரே காரியத்தை வாய்க்கச் செய்வார். கர்த்தருடைய சித்தத்தை, திட்டத்தை விட்டு மனம் போன போக்கில் போகிற யாராக இருந்தாலும் அவர்களுக்கு வேதனைகள் பெருகும். ஆரோனை போல நீயாக ஒரு தெய்வத்தை உண்டு பண்ணி கொள்ள கூடாது, அவைகளை நாடி தேடி போகக் கூடாது. நாம் தேவனை அனுதினமும் நோக்கி பார்க்க வேண்டும். அதுதான் நாம் தேவன் மேல் வைக்கும் அன்பு.

சங்கீதம் 32:10-ல் துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு, கர்த்தரை நம்பியிருக்கிற வனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். தேவனை நம்பாமல் அவருடைய வசனத்தை கைக் கொள்ளாமல் புறக்கணிக்கிறவர்களுக்கு அநேக வேதனைகள் உண்டு. கர்த்தரை நம்புகிற வனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும். நமக்கு ஆபத்து வராதபடிக்கு அவருடைய தூதனை அனுப்பி நம்மை பாதுகாப்பார், தப்புவிப்பார். நாம் வேதனை களுக்கு, வலிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சங்கீதம் 139:24-ல் வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும் என்று வாசிக்கிறோம். எப்படி சாத்தான் நம் வாழ்வில் வருகிறான், பிரச்சனைக்கு காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேதனை உண்டாக்குகிற

வழிகளை நம்மை விட்டு அகற்ற வேண்டும். தாவீது வேதனை உண்டாக்கும் வழியை தன்னை விட்டு அகற்றி கர்த்தருக்கு நேராக தன் இருதயத்தை திருப்பினான். அதனால் தான் அவருடைய இருதயத்திற்கு ஏற்றவனாக அவன் இருந்தான். நாமும் நம்முடைய இருதயத்தை கர்த்தருக்கு நேராக்கினால் வேதனை உண்டாக்கும் வழியை எல்லாம் நம்மை விட்டு அகற்றுவார். நாம் நல்ல சுகத்தோடு, பெலத்தோடு இருப்பதைத் தான் ஆண்டவர் விரும்புகிறார்.

## பிசாசினால் வேதனை

மத்தேயு 15:22-ல் அப்பொழுது, அந்தத் திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரீ ஒருத்தி, அவரிடத்தில் வந்து ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லிக் கூப்பிட்டாள் என்று சொல்லப்பட்டுள்ளது என் மகள், மகன், கணவன், உறவினர்கள் பிசாசினால் வேதனைப்படுகிறார்கள் என்று கலங்குகிறீர்களா? பிசாசுகளுக்கு தண்டனையின் இடம் தான் பாதாளம். அதனால்தான் அவைகள் இயேசுவை பார்த்து எங்களை வேதனைப் படுத்தவா வந்தீர் நீர் எங்களை பாதாளத்திற்குள் அனுப்பாதையும் இந்த பன்றி கூட்டத்துக்குள் போக எங்களுக்கு உத்தரவு கொடும் என்று கெஞ்சியது. கொடிய வேதனை நிறைந்த இடம்தான் பாதாளம். சாத்தானுக்கு நியமிக்கப்பட்ட வேதனை நிறைந்த இடம்தான் நரகம். ஐசுவரியவான் சொல்லுகிறான் நான் இந்த பாதாளத்தில் வேதனைப்படுகிறேன், எனக்கு லாசரு தன் விரலின் நுனியில் ஒரு சொட்டு தண்ணீரினால் என் நாவை குளிரச் செய்யட்டும், நான் மிகவும் வேதனை உள்ள இடத்தில் கிடக்கிறேன் என்றான். நம் வாழ்விலும் வேதனையை கொண்டு வருவது பிசாசு, பிசாசுக்கு நம் வாழ்வில் இடம் கொடுக்கக் கூடாது.

எப்பொழுதும் நம் சிந்தை, சரீரத்தை இயேசுவால் நிரப்பி வைத்துக் கொள்ள வேண்டும். தூக்க மாத்திரை, வலி மாத்திரைகளுக்கு நாம் அடிமையாகக் கூடாது. நம்முடைய நாட்களுக்குத் தக்க பெலத்தை தேவன் தருவார். மோசேக்கு 120 வயதிலும் கண் பார்வை மங்கவில்லை, நடை தள்ளாட வில்லை என்று வேதத்தில் சொல்லப் பட்டுள்ளது. என் மகள் பிசாசினால் வேதனைப் படுகிறாள் ஆண்டவரே, எனக்கு இரங்கும் என்று இயேசுவை நோக்கி கூப்பிடுகிறாள். பிசாசினால் வருகிற வேதனைகளுக்கு மருத்துவம் கிடையாது. ஆனால் இயேசு கிறிஸ்து இருக்கிறார், சகல வியாதி களையும் சுகமாக்குவார். இவரால் சுகமாக்க முடியாத வியாதி என்று ஒன்றுமே இருந்ததில்லை. இவர் அல்பா ஒமேகா, இவர் தொடக்கம் முடிவு. இவர் எல்லாமே இலவசமாக தருவார். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான்.

நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும், நம் சரீரம் தேவனுடைய ஆலயம், இதை நாம் சரியாக பராமரிக்க வேண்டும். இருதயத்தில் பிசாசுக்கு இடம் கொடுக்கக் கூடாது, தேவனுக்கு கொடுக்க வேண்டிய நேரத்தை தேவனுக்கு கொடுக்க வேண்டும். ஆவியில் நிரம்பி ஜெபிக்க வேண்டும், உபவாசிக்க வேண்டும். அதனால்தான் இயேசு இந்த ஜாதி பிசாசு உபவாசத்தினாலும் ஜெபத்தினாலு மேயன்றி வேறொன்றினாலும் போகாது என்றார். குடும்பமாக சேர்ந்து ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கும் போது தேவன் காரியத்தை கைகூடி வரச் செய்வார் என்ற நம்பிக்கை நம்மில் வரும். இன்றைக்கு உங்களை வேதனைப்படுத்துகிற காரியத்தை தேவனிடம் சொல்லுங்கள். கானானிய பெண் தன் மகளுக்கு எல்லா வைத்தியங்களும் பார்த்து குணமாகவில்லை, கடைசியில் பிசாசினால் வேதனைப்படுகிறாள் என்று அறிந்து இயேசு கிறிஸ்துவிடம் வருகிறாள் அவர் சுகமாக்கினார். இன்றைக்கு உங்கள் வாழ்விலும் ஒரு அற்புதம் நடக்கப் போகிறது. உங்கள் கணவரை, பிள்ளை களை சுற்றுகிற ஆவி ஓடப்போகிறது. உங்களை ஒடுக்குகிறவன் இல்லாமல் போகப் பண்ணுவார். எந்தெந்த காரியத்தில் நீங்கள் நசுக்கப்பட்டு, ஒடுக்கப் பட்டிருக்கிறீர்களோ தேவன் அதை எல்லாம் மாற்றி உங்களை உயர்த்துவார்.

## சுவிசேஷம் அறிவிக்காவிட்டால் வேதனை

கலாத்தியர் 4:19-ல் என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப் படுகிறேன் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார். நாம் தேவனுடைய வார்த்தையை, வல்லமையை சுமக்க வேண்டும். அவருடைய அற்புதங்களை அனுபவிக்க வேண்டும். நம் தேசம் முழுவதும் எழுப்புதல் வரவேண்டும். என் பிள்ளைக்கு அந்த இடத்தை வாங்கி கொடுக்கிறேன், இந்த தொழில ஆரம்பிக்கிறேன் என்கிறோம். ஆனால் நித்தியத்திற்கான வழியை சொல்லிக் கொடுத்திருக்

கிறோமா? தேவக் கிருபையை சம்பாதிக்கிறவர்களா இருக்கிறார்களா? இங்கு கண் மூடினால் நித்தியத்தில் தேவனோடு இருப்பார்களா? அந்த நிச்சயம் நமக்கு இருக்க வேண்டும். இந்த பூமியில் நான் மாத்திரம் நீதிமானாக வாழ்ந்து விட்டு மற்றவர்களை பற்றி கவலைப்படாமல் இருக்க கூடாது. ஆனால் பவுல் அப்போஸ்தலன் அப்படி இருக்கவில்லை எல்லா ருக்காகவும் கர்ப்ப வேதனைப்படுகிறேன் என்றார்.

நம் தேசத்தில் எழுப்புதல் வர வேண்டும், கால் மிதிக்கும் இடமெல்லாம் அக்கினியாக மாற வேண்டும், தேவ வல்லமை நம்மிலிருந்து வெளிப்பட வேண்டும். அசுத்த ஆவிகள் அலறி ஓட வேண்டும். ஜெப வீடுகள் எழும்ப வேண்டும் இயேசுவை சொல்ல வெட்கப்படக் கூடாது. நமக்கு ஆயுசு நாட்களை தேவன் கூட்டி கொடுத்ததற்கு காரணம் அவரை பற்றி சொல்லத்தான். பவுல் சொல்லுகிறார் என் சிறுபிள்ளைகளே கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக நான் கர்ப்ப வேதனைப்படுகிறேன் என்றார். இதுபோல நாமும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட பாரத்தோடு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். நம்மை தேவன் இரட்சித்ததற்கு நோக்கம் உண்டு, நாம் புசித்து குடித்து விளையாட அல்ல, அவரைப் பற்றி ஜனங்களுக்கு சொல்ல வேண்டும். பிழைப்பு கடுத்த அலுவல்களில் நாம் சிக்கிக் கொள்ளக் கூடாது. பண ஆசை எல்லா தீமைக்கும் வேறாக இருக்கிறது. பிள்ளைப்பேரு நோக்கி இருக்கிறது. பெறவோ பெலன் இல்லை என்பது போல இரட்சிக்கப்பட்டு விட்டேன் ஆனால் சுவிசேஷம் அறிவிக்க மாட்டேன் என்று சொல்லக்கூடாது. சுவிசேஷம் அறிவிக்காதவர்கள் கண் சொறுகிப் போன குருடர்கள்.

2 பேதுரு 1:7-ல் தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் என்று சொல்லப் பட்டுள்ளது. நான் அன்போடு வர வேண்டுமா பிரம்போடு வர வேண்டுமா என்று பவுல் கேட்கிறார். தேவனுடைய ராஜ்யம் பேச்சில் அல்ல, பெலத்தில் அடங்கி இருக்கிறது. நாம் பிள்ளைகள், உடன் பிறந்தவர்கள், உறவினர்களின் இரட்சிப்புக்காக கண்ணீரோடு ஜெபிக்க வேண்டும். ஒரு சகோதரி பக்தி உள்ள ஜெபிக்கிற மகள். ஆனால் அவருடைய கணவர் திருடனாக இருந்தார். தேங்காய் திருடுகிற வராக இருந்தார் இந்த சகோதரி எவ்வளவோ சொல்லியும் அவர் மனம் திரும்பவில்லை. இரவில் சென்று தோப்புகளில் தேங்காய் திருடி விற்று பணம் கொண்டு வருவார். ஒரு நாள் தேங்காய் திருடும்போது ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு தாவும் போது தவறி கீழே விழப் போனார். அப்பொழுது என் மனைவி ஆராதிக்கின்ற தெய்வமே என்னை காப்பாற்றும் என்று சொல்லிக் கூப்பிட்டார். அந்த மரண தருவாயில் இருந்து அவர் தப்புவிக்கப்பட்டார். இதை கேட்ட தோப்பு ஓனர் அவர் கீழே இறங்கி வந்தவுடன் யாரையா? அந்த உன் மனைவி ஆராதிக்கின்ற தெய்வம், நீ கூப்பிட்டவுடன் அவர் உன்னை தப்புவித்தாரே என்று கேட்டார். அதெல்லாம் எனக்கு தெரியாது வாரும் என் மனைவியிடம் உம்மை அழைத்துச் செல்கிறேன் என்று அழைத்துச் சென்றார். இரண்டு பேருக்கும் அந்த சகோதரி சுவிசேஷத்தை அறிவித்தார்கள். இப்பொழுது இரண்டு பேரும் ஊழியக்காரர்களாய் மாறி இருக்கிறார்கள். இன்றைக்கு நாம் தேவனுக்காக என்ன செய்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம்.

அந்த காலத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்காக உணவுப் பொருட்களை கொடுத்தார்கள். பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுத்தார்கள். உலகப் பொருள்களின் மூலம் தேவனுடைய அன்பை ஜனங்களுக்கு சொல்லி மக்களை இரட்சிப்புகள் நடத்தினார்கள். நாம் இரட்சிக்கப்பட அவர்கள் பிரசவ வேதனைப்பட்டார்கள். நான் எதுவும் செய்ய மாட்டேன் என்று சொல்லி உட்கார்ந்திருந்தால் நம்முடைய இரட்சிப்பு எப்படிப்பட்டது?. நம் ஆவி எப்படிப்பட்டது? என்று நம்மை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கிராமங்கள் சந்திக்கப்பட வேண்டும், எழுப்புதல் வர வேண்டும், இயேசு கிறிஸ்துவுக்காக நாம் செயல்பட வேண்டும். அப்பொழுது ஒரு குறை வில்லாமல் நம்மை தேவன் நடத்துவார். முதிர் வயதாகிறது நான் இனி எப்படி சுவிசேஷத்தை அறிவிப்பேன் என்று சொல்லக்கூடாது. முதிர் வயதிலும் எலிசபெத் பிரசவ வேதனைப்பட்டு யோவானைப் பெற்றார் என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஒன்று முதிர் வயதில் பிரசவ வேதனைப்பட்டு ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்த வேண்டும், இல்லையென்றால் யோவான்களாக மாற வேண்டும். பவுல் அப்போஸ்தலன் போல கர்ப்ப வேதனைப்பட்டு ஆத்துமாக்களை கிறிஸ்துவினிடத்தில் நடத்த வேண்டும். அப்பொழுது நமக்கு பரலோகத்தில் பலன் மிகுதியாக இருக்கும். ஆண்டவராகிய தேவன் தாமே உங்களுடைய வேதனைகளை மாற்றி, எல்லா கட்டுகளிலிருந்து உங்களை விடுதலையாக்கி, அவருடைய சித்தத்தை, விருப்பத்தைச் செய்ய கிருபை செய்வாராக.

# சந்தோஷமாயிருங்கள்



சகோதரி
கலா வின்செண்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள் எரேமியா 31:13 அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள், நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்.

யோவான் 16:20 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும், நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

நம் வாழ்க்கையில் பல விதங்களில், பல காரியங்களுக்காக துக்கமடைகிறோம். நினைத்த காரியம் நடக்காமல் போகும்போது, பொல்லாத மனிதர்களால் துன்பம் வரும்போது, எதிர்பாராத காரியம் நடந்து விடும் போது, தேவையற்ற செலவுகள், வியாதிகள், பணப் பற்றாக்குறைகள் வரும்போது நாம் துக்கமடைகிறோம். இந்த செய்தியை நான் ஆயத்தம் செய்யும் போது சந்தோஷத்திற்கு எதிரான காரியங்கள் தான் நடந்தது. ஆனாலும் அவற்றின் நடுவில் கர்த்தர் தந்த சந்தோஷத்தை பற்றி இந்த பத்திரிக்கையின் மூலமாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தாவீது வாழ்க்கையைப் பாருங்கள், சங். 42:9-ல் நான், என் கன்மலையாகிய தேவனை நோக்கி ஏன் என்னை மறந்தீர்? சத்துருவினால் ஒடுக்கப்பட்டு, நான் ஏன் துக்கத்துடனே திரியவேண்டும் என்று சொல்லுகிறார். தாவீது துக்கத்தின் மிகுதியால் ஏன் என்னை மறந்தீர்? நான் சத்துருவினால் ஒடுக்கப்பட்டு ஏன் துக்கத்தோடு திரியவேண்டும் என்று தன் வேதனையின் மிகுதியினால் புலம்புகிறார். வேதனை, துக்கம் நிறைந்த அவன் வாழ்க்கையில் அற்புதம் செய்து அவனை மகிழ்ச்சியினால் நிரப்பின தேவன் உங்கள் வாழ்க்கையில் உள்ள துக்கங்களை, வேதனைகளை மாற்றுவார். சத்துரு உங்களை ஒடுக்கவோ, மேற்கொள்ளவோ விடமாட்டார்.

1 நாளா 4:9,10-ல் யாபேஸ் தன் சகோதரரைப் பார்க்கிலும் கனம் பெற்றவனாயிருந்தான். அவன் தாய், நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள். யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி, தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான், அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். யாபேஸ் துக்கம் நிறைந்த மனிதன். அவன் தாய் அவனை துக்கத்தோடே பெற்றேன் என்று தான் யாபேஸ் என்று பெயர் வைத்தாள். ஆனால் அவனோ தீங்கு தன்னை

துக்கப்படுத்தக் கூடாது என்றும், தேவன் தன்னை ஆசீர்வதித்து, தன் எல்லைகளைப் பெரிதாக்க வேண்டும், மற்றவர்களுக்கு முன்பாக நான் துக்கத்தின் மகனாக அல்ல, ஆசீர்வதிக்கப்பட்டவனாக வாழ வேண்டும் என்று அவன் வேண்டினான். அவன் வேண்டினதை தேவன் அருளினது போல இன்றைக்கு நீங்களும் என் வாழ்க்கையில் எந்த ஆசீர்வாதமும் இல்லையே என்று புலம்புகிறதை தேவன் அறிவார், உங்கள் ஆசீர்வாதத்திற்கு தடையாக இருக்கும் காரியங்களை உங்களை விட்டு அகற்றி, ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக உங்களை வாழச் செய்வார்.

1 சாமு 1:15-ல் அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக, அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக் கிலேசமுள்ள ஸ்திரீ, நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை, நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். அன்னாள் என்ற பெண் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ, ஆனால் அவள் தேவசமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்த போதோ (கத்தோலிக்க மொழி பெயர்ப்பில் என் இருதயத்தை ஆண்டவருக்கு முன் திறந்து காட்டினேன் என்று இருக்கிறது) 18வது வசனம் சொல்கிறது அப்புறம் அவள் துக்கமா யிருக்கவில்லை என்று. நீங்களும் தேவசமூகத்தில் உங்களுடைய இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும் போது அன்னாளின் துக்கத்தை மாற்றினவர் உங்கள் துக்கத்தையும் மாற்றுவார். மத் 6:25-34 வரை வாசித்துப் பாருங்கள். கவலைப்படாதிருங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் சந்தோஷமாயிருங்கள் என்று ஆண்டவர் சொல்கிறார். எப்படியெல்லாம் நாம் சந்தோஷமாய் இருக்க முடியும் என்று பார்க்கப் போகிறோம். .

## எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்

1 தெச 5:16-ல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்று நாம் வாசிக்கிறோம். அது முடிகின்ற காரியமா? ஒரு மணி நேரம் கூட சந்தோஷமாய் இருக்க முடிவதில்லை. ஏதாவது ஒரு பிரச்சினை மேல் பிரச்சினை வருகிறது. ஒரு சகோதரி நானும் என் கணவரும் சந்தோஷமாய் இருக்க முடிவதில்லை. மாமியார், நாத்தனார் தொல்லை என்று கடிதத்தில் எழுதியிருந்தார்கள். என் மனைவியால் நாள்தோறும் தொல்லை, பிள்ளைகளால் பிரச்சினை சந்தோஷம் என்பதே எனக்கு இல்லை என்று தான் இன்றைக்கு அநேகர் புலம்புகிறோம். மூன்று வித சந்தோஷம் நம் வாழ்க்கையில் இருக்கிறது.

**சரீரத்துக்கு ஏற்ற சந்தோஷம்** — விரும்பினதை புசிப்பது, குடிப்பது எல்லா லௌகீக காரியங்களில் அடங்கும். அவை உலகப்பிரகாரமாக இந்த சரீரத்தில் கிடைக்கும் சந்தோஷம். **Pleasure.**

**மனதின் சந்தோஷம்** - நாம் இயற்கை காட்சிகளைப் பார்த்தால், வீடு கட்டிவிட்டால், படிப்பில் வெற்றி பெற்றால் மனதில் எவ்வளவு சந்தோஷம் வருகிறது. Happiness. **ஆவியினால் உண்டாகும் சந்தோஷம்** - Joy என்று ரோமர் 14:17-ல் தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமா யிருக்கிறது. சூழ்நிலைகள் மாறியிருந்தாலும், எல்லாப் பக்கமும் இருள் சூழ்ந்திருந்தாலும், போராட்டங்களும் பிரச்சனைகளும் இருந்தாலும் உள்ளத்தின் ஆழம் களிகூர்ந்து கொண்டேயிருக்கும். அது ஆவியினால் உண்டாகும் சந்தோஷம்.

அப் 13:52 சீஷர்கள் இந்த சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். மேலும் சங் 71:23-ல் நான் பாடும் போது என் உதடுகளும் நீர் மீட்டுக்கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும் என்று சங்கீதக்காரன் தேவனைத் துதிக்கும் போது கிடைக்கும் சந்தோஷத்தைப் பற்றி சொல்லுகிறார். இது எப்படி நமக்கு கிடைக்கும் என்று நினைக் கிறீர்களா? சங் 34:1,2-ல் கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும், சிறுமைப்பட்டவர் கள் அதைக்கேட்டு மகிழுவார்கள் என்று சொல்லப் பட்டுள்ளபடி கர்த்தரை நாம் எக்காலத்திலும் ஸ்தோத்தரிக்கும் போது, நம் வாழ்க்கையில் என்ன நடந்தாலும் துதி, ஸ்தோத்திரம், பாடல் ஆராதனை செய்யும் போது நாம் சந்தோஷமாயிருக்க முடியும். பவுலும் சீலாவும் சிறைச்சாலையில் பாடினார்கள், துதித்தார்கள், அதனால் அந்த துக்கம் அவர்களை மேற்கொள்ள முடியவில்லை. நாம் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஏசா 35:10. துதிக்கும் போது உலகம் தர முடியாத சந்தோஷம் நமக்குள் உண்டாகிறது. துதியின் ஆடையை அணிந்து புலம்பலுக்கு பதில் துதியுங்கள். சங்.30:11—ல் என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப்பண்ணினீர், என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர் என்று தாவீது தேவனைத் துதிக்கிறார்.

**தேவனைத் தேடும் போது மகிழ்ச்சி** - சங். 40:16—ல் உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக, உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும்

சொல்வார்களாக. அதனால் தான் தாவீது உமது சமூகத்தில் ஆனந்தமும், உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு என்கிறார். யூதருக்கு பயந்து சீஷர்கள் கதவுகளைப் பூட்டியிருந்தார்கள். ஆனால் அதிகாலையில் இருட்டோடே அவரை தேடிப்போன பெண் மரியாள் அவரைக் கண்டு சந்தோஷமடைந்தாள். இயேசு யோவான் 6:22-ல் உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்தி லிருந்து எடுத்துப்போடமாட்டான் என்றார். சங்.34:5-ல் அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந் தார்கள், அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. அவரை நோக்கிப் பார்க்கிறவர்களின் சூழ்நிலை எப்படியிருந்தாலும், அவர் எல்லா சூழ்நிலையையும் மாற்றி அவர்களை பிரகாசமடையச் செய்வார். **வேதத்தால் மகிழ்ச்சி** - சங் 119:92-ல் உமது வேதம் என் மனமகிழ்ச்சியா யிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோ யிருப்பேன். தாவீது பல பிரச்சனைகள் வழியாக கடந்து போகும் போதெல்லாம் தேவனுடைய வார்த்தை அவரை தேற்றினது அவர் உள்ளத்தில் மகிழ்ச்சியை கொடுத்தது.

## கர்த்தருக்குள் சந்தோஷமாயிருங்கள்

பிலி.4:4—ல் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். ஆபகூக் 3:17,18—ல் அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். நம் வாழ்க்கையில் எது இல்லாமற்போனாலும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும். யோபுவைப் பாருங்கள் ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகள் எல்லாம் இல்லாமற்போன போதும் என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி தேவனைத் துதித்தான்.

கானா ஊர் திருமண வீட்டிற்கு இயேசுவை அந்த மனிதன் அழைத்திருந்தான். அங்கு ஏற்கனவே 6 கற்சாடிகளில் தண்ணீர் இல்லை, ரசமும் இல்லை. எதுவும் இல்லை. ஆனால் இயேசுவைக் கூப்பிட்டு விட்டானே. அவர் இல்லை என்று சொல்லி விடுவாரா? அற்புதம் செய்தார். சந்தோஷப்படுத்தினார். நீங்களும் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். துன்பமா துயரமா இயேசுவை கூப்பிடும் போது நம் வாழ்க்கையில் மாற்றம் உண்டாகும். வன ாந்தரத்தில் 5அப்பம் 2மீன் மட்டும் தான் இருந்தது. இந்த கொஞ்சத்தை இயேசுவிடம் கொடுத்த போது அனைவரும் திருப்தியாக சாப்பிட்டு மீதமும் எடுத்தார்கள். இன்றைக்கு உங்களுடைய இல்லாத நிலையை மாற்றுமே என்று அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். சாறிபாத் விதவையிடம் கொஞ்சம் மாவு, எண்ணெய் இருந்தது. இந்த பஞ்சகாலத்தில் நானும் என் மகனும் எப்படி வாழப் போகிறோம் என்று திகைத்த அந்த விதவை தாய்க்கு தன்னிடம் இல்லை என்ற நிலையை ஆண்டவர் மாற்றினார். குறைவு, போதாது என்ற நிலையை நம் வாழ்க்கை யிலும் தேவன் மாற்றுவார்.

**கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிரு -** சங். 37:4-ல் கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். லூக் 15:32-ல் உன் சகோதரனாகிய இவனோ மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான்; ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியா யிருக்க வேண்டுமே என்று சொன்னான் என்ற ார். இளையமகன் தன் தகப்பன் வீட்டைவிட்டு தூரமாயிருந்தால் சந்தோஷமடைய முடியாத நிலை அவன் வாழ்க்கையில் இருந்தது. தகப்பன் வீட்டுக்குள் வந்தால் தான் மகிழ்ச்சி. நான் தகப்பன் வீட்டுக் போவேன் என்று சொல்லி கொண்டிருந்தால் கூட இந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியாது. தகப்பன் வீட்டுக்கு வந்துவிட வேண்டும். வேண்டாம் இந்த பன்றி தின்கிற தவிடு. வேண்டாம் இந்த அடிமை வாழ்வு. எழுந்திருந்து அப்பா வீட்டிற்குள் வந்து சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருப்போம் என்று தகப்பனிடத்தில் வந்தான். இன்று நாமும் கூட நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கிற காரியங் களை தூக்கி எறிந்து விட்டு தேவனிடத்தில் வந்தால் எல்லையில்லாத மகிழ்ச்சியினால் நம்மை நிரப்பி நடத்துவார்.

## நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்

ரோம. 12:12 —ல் நம்பிக்கையிலே சந்தோஷமா யிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். ஆபிரகாமிடம் உன் சந்ததியை வானத்து நட்சத்திரத்தைப்போல, கடற்கரை மணலைப் போல பெருகப் பண்ணுவேன் என்று ஆண்டவர் வாக்குப் பண்ணினார். ஆனால் அது நிறைவேற தாமதமாகிக் கொண்டே போனது 25 வருடங்கள் கிட்டத்தட்ட அவன் காத்திருந்தான்.

ரோமர் 4:20,21—ல் தேவனுடைய வாக்குத் தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிற ாரென்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். முழு நிச்சயமாய் தேவனை நம்பினான். எபி 11:1-ல் விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. விசுவாசம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு பதில் இருக்கிறது. நம்பப்படுகிறவைகளின் உறுதி. தேவன் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நாம் நம்புவோம். எபி.10:36-ல் நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற பொறுமை நமக்கு அவசியம் வேண்டும். மீட்பர் வர நம்பிக்கையோடே, பொறுமை யோடு காத்திருந்த சிமியோன் (லூக். 2:25, 2:37,38) அன்னாளை போல எவ்வளவு காலம் ஆனாலும் காத்திருக்க வேண்டும். ஜாய்ஸ்மேயர் வாழ்க்கையில் குழந்தை பருவத்தை திருடிவிட்ட சாத்தான். சந்தோஷம், சுயமரியாதை, பணம், சுகம் எல்லாவற்றையும் திருடிவிட்டான் அவன் ஒரு திருடன். ஆனால் யோபு இரண்டத்தனையாய் பெற்றான். நீங்கள் கர்த்தாவே எனக்கு, என் பிள்ளைகளை கணவனை திருடாதபடிக்கு உதவிசெய்யும் என்று சொல்லுங்கள் சாத்தானைப் பார்த்து நான் பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரம்பி உன்னை ஊதி திரும்பவும் நரகத்துக்கே தள்ளுவேன். நீ தோற்றவன் என்று சொல்லுங்கள். என் வாழ்க்கையில் நான் இழந்த எல்லாவற்றையும், வெட்டுக்கிளி பட்சித்த வருஷத்தை நான் திரும்ப பெறுவேன் என்று சொல்லுங்கள்.

## பாடுகளுக்கு பங்காளிகள் ஆனதால் சந்தோஷப்படுங்கள்

1 பேதுரு 4:13 — ல் நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்.

தங்கம், வெள்ளி ஆழமான சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு தனியாக ஓரிடத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. தங்கமும் வெள்ளியும் பேசிக் கொண்டது ஐயோ! எல்லாம் சந்தோஷமாய் இருக்கிறது. ஆனால் இந்த மனிதர்கள் என்னை அடிப்பதும் அக்கினியில் போடுவதும் என்னால் சகிக்க முடியவில்லை என்றது. குவிந்து கிடக்கிற வர்களெல்லாம் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறாங்க என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் நீங்கள் அடிக்கப்பட்டால்தான், நெருப்பில் போடப்பட்டால்தான் விலையேறப் பெற்றவளாக மாற முடியும். அப் 5:40,41 —ல் அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமான மடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனார்கள் என்று வாசிக்கிறோம். அவர் நாமத்திற்காக அடிபட்டதால் சீஷர்கள் சந்தோஷப் பட்டார்கள்.

## மனப்பூர்வமாய் கர்த்தருக்கு கொடுப்பதில் சந்தோஷப்பட்டார்கள்

1 நாளாகமம் 29:9 — ல் இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப் பட்டான்.

2 கொரி 8:2,3—ல் அவர்கள் மிகுந்த உபத்திர வத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திர முடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்.அவர்களைப் போல நாமும் தேவனுடைய ஊழியத்தை நம்முடைய ஜெபத்தினாலும், காணிக்கைகளினாலும் தாங்கி தேவனுடைய சந்தோஷத்தில் பங்கடைவோம். லூக் 1:58—ல் கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப் பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு, அவளுடனேகூடச் சந்தோஷப்பட்டார்கள். எலிசபெத்தினிடத்தில் கர்த்தர் தம் இரக்கத்தை விளங்கப்பண்ணினார் என்று எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். இன்றைக்கு நாமும் தேவனைத் தேடுவதிலும், அவருக்கு கொடுப்பதிலும், அவருக்காக இந்த பூமியில் பாடுகளை அனுபவிப்பதிலும் பொறுமையோடு இருந்து அவருடைய நாமத்தை உயர்த்த கிருபை தருவாராக.

# தடைகளை நீக்கி போடுகிறவர் உங்களுக்கு முன்பாக நடந்து போகிறார்

சகோதரி பிரேமா டேவிட்

தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்துபோகிறார், அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்துக் கடந்துபோவார்கள், அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார், கர்த்தர் அவர்கள் முன்னணியில் நடந்துபோவார். மீகா 2:13 கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி தங்கைகளே, நம்முடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு தடையாக நிற்கும் எல்லா தடைகளையும் நீக்கிப் போடும் வல்லமை உடையவராக முன்னே செல்லும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். ஒத்தையடி பாதையில் நடந்து போகிறோம் அங்கே முள் கிடந்தால் நாம் பெரும்பாலும் அதை தாண்டி போக பார்ப்போம் அல்லது சைடுல ஏதாவது வழி இருக்கான்னு பார்த்து அது வழியாய் போவதற்கு பார்ப்போம். தாண்டி தாண்டி போகுற வங்கள முள் குத்தலாம், எல்லாராலும் தாண்டவும் முடியாது. சுத்திப் போனால் நேரமாகும், வழி மாற வாய்ப்புண்டு. இந்த நேரத்தில யாரோ ஒருவர் தன் கையில் முள் குத்தினாலும் பரவாயில்லை, அடுத்து வருகிறவர்களுக்கு முள் குத்த கூடாது, ஈஸியாக, எளிதாக போக வேண்டிய இடத்திற்கு, நேரத்திற்கு போகணும் என்று முட்களை எடுத்துப் போடுகிறார் என்றால் அது எவ்வளவு நல்ல விஷயம், எத்தனை பேருக்கு அதினால் பயன் கிடைக்கும்?

நமது (உங்களது) வாழ்க்கையின் முன்னேற்றத்தை, உயர்வை, வெற்றியை, சந்தோஷத்தை தடை செய்யும் முட்கள் போன்ற தடைகள் எதுவோ அதை நீக்கி போடுகிறவராக நம்முடைய ஆண்டவர் உங்களுக்கு முன்பாக இப்பொழுது நடந்து போகிறார். மனித குலம் அனைத்தின் மேலும் பாவம், சாபம், வியாதி, வறுமை, மரணம், நரகம், சாத்தான் என்ற எல்லாவிதமான தடைகளையும் நீக்கி போடுகிறவராக சிலுவை மரணத்தின் மூலம் நமக்கு முன்பாக நடந்து போனதாலே நாம் சந்திக்கிற இந்த தடைகளை எளிதாக தாண்டி போகலாம். அவர் பாடுகளின் வழியாய் நடந்து போனதால், நம் தடைகளை நீக்கி (ஈஸியாக) வாசலில் உட்பிரவேசித்து கடந்து போவோம். அவர் மரணத்தை ஜெயித்ததால், மரணத்திற்கு அப்பால் உள்ள பரலோகத்திற்கு புதிதான வழி திறந்தார்.

நல்லா படிக்க முடியவில்லை, என்னால் ஜெபிக்க முடியவில்லை, வேதம் வாசிக்க முடியவில்லை, தூக்கம் வந்திருது, சர்ச்சுக்கு போக முடியவில்லை, விருந்தாடி வந்துட்டாங்க, ஃபிரண்ட்ஸ் கூப்பிட்டாங்க, வேலை கிடைக்கவில்லை, திருமண ஆகவில்லை ஒரே தடை அக்கா, அண்ணாவுக்கு குழந்தை இல்லை, அப்பா செய்யும் வேலையெல்லாம் தடைபடுகிறது என்ன செய்கிறது என்று தெரியலனு யோசிச்சிட்டு இருக்கீங்களா? கலங்காதீங்க கர்த்தர் உங்கள் தடைகளை நீக்குகிறவராக உங்கள் முன்பாக போய் கொண்டிருக்கிறார். மாத்திரமல்ல போவார் என்றும் இரண்டு முறை சொல்லப்பட்டுள்ளது. தடைகள் வருதோ, தடுக்குறாங்களோ என்று பின்வாங்காமல் தடைகளை நீக்கி, தடைகளை நீக்கும் தயாபரரின் உதவியோடு முன்னேறுவோம். எனக்குன்னு யாருமில்லை என்று இனி நீங்க சோர்ந்து போக தேவையில்லை. உங்கள் ராஜா தனது சேவைகளோடு உங்களுக்கு முன்பாக போகிறபடியினால் இனி எதுவும் தடையாய் நிற்க முடியாது. சரி என்னென்ன விதமான தடைகள், அவைகள் எப்படி நீங்குகிறது என்று பார்ப்போம்.

## சாத்தானால் வந்த தடைகள் நீங்கும்

சாத்தானோ, எங்களைத் தடை பண்ணினான். 1 தெச 2:18, ரோமர் 1:13, 15:22 மனிதர்களை காப்பாற்ற தெய்வமாகிய இயேசு இந்த பூமியிலே பிறக்கப் போகிறதை அறிந்து, அதை தடுக்க பார்த்தான். அவர் பூமியிலே பிறந்த பின் ஊழியம் செய்யும் முன் உபவாசிக்கும் போது அவரை சோதித்தான் வேதத்தையே பேசி அவர் ஊழியத்தை தடை செய்யப் பார்த்தான். அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரை பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை (ஊழியம்) செய்வாயாக என்று எழுதப்பட்டுள்ளதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான். மத்தேயு 4:10,11. அதன் பின்பு சிலுவையிலே இயேசுவை அறைந்து விட்டால் அவரை அழித்து விடலாம், மனிதர்களும் காலங்காலமாய் கஷ்டப்பட்டு நரக வேதனை அனுபவிக்கட்டும் என்று சாத்தானின் தீர்க்கணை களை இயேசு சிலுவையில் அழித்து மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து சாத்தானை ஜெயித்து விட்டார். எபிரேயர் 2:14,15. கொலோ 2 :4,15.

சாத்தானை ஜெயித்த இயேசுவை நீங்கள் நோக்கிக் கூப்பிட்டால் போதும். உங்கள் படிப்பு, வேலை, திருமணம், ஆவிக்குரிய வாழ்க்கையின் சாட்சி இவற்றிற்கு எதிராய் சாத்தான் என்ன தடை கொண்டு வந்தாலும் அதை ஆண்டவர் நீக்கிப் போடுகிறவராய் உங்களோடு இருக்கிறார். அவர் உங்களுக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவையாக்குவார் ஏசாயா 45:1-4. ஒருவரும் பூட்டக் கூடாதபடி அவர் திறக்கிறவர், ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிற வர். அவர் வெங்கல கதவு போல இருக்கும் தடைகளை உடைத்து, இருப்பு தாழ்ப்பாள்களை முறித்து போட்டு, இதுவரை நீங்கள் முன்னேற முடியாமல், வெற்றி பெற முடியாமல் தடையாய் இருக்கிறதை நீக்கி போடுவார்.

இஸ்ரவேல் மக்கள் 430 வருஷம் பார்வோன் அடிமையாய் வைத்திருந்தான். அவர்களுடைய சொந்த நாடாகிய கானானுக்கு அழைத்து வர ஆண்டவர் மோசேயை அனுப்பினார். பார்வோனின் இருதயம் கடினமாய் இருந்ததினால், அவர்களைப் போக விடமாட்டேன் என்றான். ஆண்டவர் செய்த அற்புதங்கள் அனைத்தும் அவனுக்கு வாதைகளாக இருந்ததினால் அவர்களை போக விட்டான். இனி தடையில்லை என்று அனுப்பினான். அவர்கள் எகிப்தில் இருந்து செங்கடலுக்கு அருகில் சென்று கொண்டிருக்கும் போது ஐயோ, அவர்களை எப்படி போக விட்டேன் என்று சொல்லி தன் சேனைகளோடு பின் தொடர்ந்தான். இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்னால் செங்கடல், பின்னால் பார்வோன், மற்ற பக்கங்களிலும் மலைகளால் அடைக்கப்பட்ட, சுற்றிலும் உள்ள தடைகள் நீங்க, அவர்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். யாத் 14:10. ஆண்டவர் செங்கடலை இரண்டாய் பிளந்து வழிவிட்டார். அடுத்து மதில் சூழ்ந்த எரிகோ பட்டணம் வழியாக நடந்து போக அனுமதி கேட்டால் அந்த ஊர் வாசலை அடைத்துக் கொண்டார்கள். ஆண்டவர் யோசுவாவுக்கு கூறிய ஆலோசனைப்படி எரிகோவை ஏழு நாள் அமைதியாய் சுற்றி வந்தார்கள். ஏழாம் நாள் ஏழு முறை சுற்றி வந்து ஏழாவது முறையில் சத்தமாக ஆண்டவரை துதித்தார்கள் மதில் இடிந்து விழுந்தது.

தம்பி, தங்கையே அம்மா அப்பா பெரியவங்க கூப்பிடட்டும், வேலை வெட்டி இல்லாதவங்க துதிக்கட்டும், நான் ஏன் இயேசுவை கூப்பிடனும்னு நினைக்கிறீங்க தானே? நீங்க காலமெல்லாம் கஷ்டப்படாம இருக்க இந்த எளிதான காரியத்தை நீங்க செய்யலாமே. இயேசு தான் உண்மையான தெய்வம் அவருக்கு ஒப்பான தேவன் யாரும் இல்லை மீகா 7:18. ஆனால் சாத்தான் அவருக்கு இணையாய் தன்னைக் கொண்டு வந்து, தன்னை ஜனங்கள் வணங்க வேண்டும் என்று முயற்சி பண்ணி உலகத்தை தன் பக்கம் ஈர்க்கப் பார்க்கிறான். அதில் ஒன்றுதான் செல்போன். உலகம், மாமிசம், பிசாசு உங்களை உங்கள் நினைவை, வாழ்க்கையை ஆள இடம் கொடுத்தால் சாத்தான் தடைகளைக் கொண்டு வருவான். ஆனால் இயேசுவை உண்மையாய் நீங்கள் நோக்கி கூப்பிட்டால் அவர் தடைகளை நீக்குவார். சாத்தான் தான் செய்கிறது தடைபடாது என்று நினைக்கிறான். ஆண்டவர் அதை தாறுமாறாக்கி விடுவார், ஆதி 11:6 அவர் சகலத்தையும் செய்ய வல்லவர், அவர் உங்களுக்கு செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது யோபு 42:2. எனவே பயப்படாதிருங்கள்.

## மற்றவர்களால் வந்த தடைகள் நீங்கும்

2 சாமு 5:6,7. இஸ்ரவேல் நாட்டு முதல் ராஜாவாகிய சவுல் மரித்தபின் இஸ்ரவேலின் மக்கள் எப்ரோனில் ராஜாவாக இருந்த தாவீதை நோக்கி என் ஜனமாகி இஸ்ரவேலை மேய்த்து அவர்களின் தலைவனாய் இருப்பீர் என்று கர்த்தர் உமக்கு சொல்லி இருக்கிறாரே என்று சொல்லி இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். கர்த்தர் சாமுவேலை கொண்டு சொன்ன வார்த்தையின்படியே அவர் ராஜாவார். அப்பொழுது எருசலேமிலே குடியிருந்த எபூசியர்கள் தாவீதுக்கு எதிராய், அவனை குறித்த கர்த்தருடைய திட்டத்திற்கு எதிராய் பேசினார்கள். உன்னாலே எருசலேமுக்குள் வர முடியாது, வரக்கூடாது குருடர், சப்பாணிகள் உன்னை தடுப்பார்கள், அவர்களை கூட நீ ஜெயிக்க முடியாது என்று பேசினார்கள். ஆனால் தாவீது தடைகளை நீக்கி போடுகிற ஆண்டவரின் துணையோடு, அவருடைய அழைப்பும், அபிஷேகமும் மாறாது என்பதை உணர்ந்து எழுந்து எபூசியரை முறியடித்து எருசலேமை, சீயோன் கோட்டையை பிடித்தான். நாளுக்கு நாள் விருத்தி அடைந்தான். நீங்களும் மற்றவர்களால் உன்னால முடியாது, முன்னேற முடியாது, ஆண்டவர் சொன்னது என்னைக்கு நிறைவேற போகிறது என்று உங்களை குறித்த தேவனின் திட்டத்தை கேலி பண்ணி, தடைகளை வைக்கிறார்களோ? தாவீதை போல கர்த்தரை எப்பொழுதும் உங்களுக்கு முன்பாக நிறுத்தி நோக்கி கொண்டிருங்கள். நீங்கள் அசைக்கப்படுவதில்லை, தடைகள் விலகும்.

## கர்த்தரால் வரும் தடைகள் நீங்கும்

பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டு ஆவியானவரோ அவர்களை போக ஒட்டாத இருந்தார் அப் 16:6,7 பவுலை பிந்தினியாவுக்கு போக வேண்டாம் என்று தடுத்தவர் மக்கதொனியாவுக்கு போகும்படி வழி நடத்துகிறார். தீமைகளை தடுத்து நன்மைக்கு ஏதுவாக நடத்துவார். கர்த்தரோ அன்னாளின் கர்ப்பத்தை அடைத்திருந்தார் 1 சாமு 1:5. ஆண்டவர் நமக்கு தடைகளை போட்டு வேதனைப் படுத்துகிறவர் அல்ல தீமையை நன்மையாய் மாற்றுகிறவர். குழந்தை இல்லை என்பதால் அன்னாள் பட்ட வேதனைக்கு, வடித்த கண்ணீருக்கு அளவில்லை. ஆனால் அந்த தடைகள் மத்தியில் ஆலயத்தில் அவள் பண்ணின ஜெபத்திற்கும், வடித்த கண்ணீருக்கும் கிடைத்த பலனுக்கு அளவில்லை. நம் எல்லாருக்கும் தெரியும் அன்னாளுக்கு பிறந்த சாமுவேல் இஸ்ரவேல் அனைத்தின் மேலும் பெரிய தீர்க்கதரிசி ஆனார். உங்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு காரியம் கர்த்தரால் கூட தடைபட்டிருந்தால் ஆலயத்திற்கு சென்று இதயத்தை ஊற்றி கர்த்தரிடம் கேளுங்கள், அப்பொழுது கர்த்தர் சாமுவேலை கொடுத்து அன்னாளை ஆசீர்வதித்தது போல உங்களுடைய வாழ்க்கையில் இருக்கும் தடைகளையும் நீக்கி உங்களுக்கும் ஆசிர்வாதத்தை தருவார்.

ஆகையால் என்ன விதமான, எந்த தடையாய் இருந்தாலும் இயேசுவை கூப்பிடுங்கள் நோக்கி பாருங்கள் அப்பொழுது உங்கள் தடைகள் விலகும். தடைகளை நீக்கி போடுகிற ராஜா இயேசு தாமே உங்களுக்கு முன் சென்று வழிநடத்துவாராக.

# நீ சுகமாவாய்



**ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா,**

ஓரல் ராபர்ட் என்ற சிறுவன் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான் அவன் தாத்தா வக்கீல், அதனால் நானும் நல்லா படிச்சு வக்கீலாகனும் என்கிற ஆம்பிஷன்ல அவன் இருந்தது. படிப்பில மட்டுமல்ல விளையாட்டுலயும் ரொம்ப ஆர்வம். வாலிபால் விளையாடுவதில் பெஸ்ட் மட்டுமல்ல, எங்கே போய் விளையாடினானோ அங்கெல்லாம் ஜெயிச்சுட்டும் வந்தான். ஆனால் அவனுக்கு ஒரு பலவீனம் இருந்துச்சு. அவனால வேகமாக பேச முடியாது, கொன்னி கொன்னி, திக்கி திக்கித் தான் பேசுவான். அதனால நான் எப்படி வக்கீலாக முடியும், வக்கீல்னா நல்லா பேசணுமே என்ற கவலையும், சோர்வும் அவனுக்கு வந்துருச்சு. ஒரு நாள் சாயங்காலம் ஸ்கூல்ல வாலிபால் விளையாடிட்டு இருக்கும்போது உயரமாய் குதித்து ஒரு கட் அடிக்கும் போது அப்படியே மயங்கி விழுந்திட்டான். உடனே அவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனாங்க. டாக்டர் அவனுடைய விலா எலும்பு, நுரையீரலில் TB வந்திருச்சு. இனிமே அவ்வளவு தான் இதிலேயே அவன் மரிப்பது நிச்சயம் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். ஏன்னா அந்த காலத்தில் TB-க்கு மருந்தே கண்டுபிடிக்கவில்லை. ஆறு மாதமா ஆஸ்பத்திரியிலே இருந்தும் கொஞ்சம் கூட குணம் ஆகவில்லை. மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் வீட்டிற்கு கூட்டிட்டு வந்தார்கள். அப்ப அவங்க அக்கா ஊக்கமாக அவனுக்காக ஜெபித்தாங்க. நீ சுகமாவாய், நீ நல்லாகி இயேசப்பாவுக்கு ஊழியம் செய்வாய்னு தீர்க்கதரிசனமாக சொன்னாங்க. அந்த நேரமே அவன் மேல் அக்கினி காற்று மாதிரி ஆண்டவருடைய வல்லமை அவனை தொட்டது. உடனே அவன் படுக்கையில் இருந்து துள்ளி, குதித்து எழுந்தான். TB வியாதி விலகிருச்சு. பரிபூரண சுகமும் கிடைச்சிருச்சு. திக்கி திக்கி பேசினதும் மாறி நல்ல தெளிவாக பேச ஆரம்பிச்சிட்டான் பரிசுத்த ஆவியானவர் தந்த அந்நிய பாஷையை பேசி ஆண்டவருக்கு ஊழியம் செய்ய 14 வயதில் தன்னை ஒப்புக்கொடுத்தான். 24 வயதிற்குள்ளாக வேதாகமத்தை (பைபிளை) முழங்கால் போட்டு 200 முறை வாசித்து முடித்தார். அமெரிக்காவிலே ஒரு பைபிள் யூனிவர்சிட்டியை நிறுவினார். பத்து வயதில் மரிக்க இருந்த ஓரல் ராபர்ட் சிறுவனுக்கு ஆண்டவர் உயிர் கொடுத்து, அவனை 91 வயது வரை (2009 ஆம் ஆண்டு) உயிர் வாழ ஆயுசை கூட்டி கொடுத்தார். அவர்தான் உலகமெங்கும் தேவனால் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட ஊழியக்காரர் ஓரல் ராபர்ட்ஸ். பின் நாட்களில் அவர் மூலமாய் இயேசப்பா நிறைய பேருக்கு சுகம் கொடுத்தாங்க. என்ன குட்டீஸ் உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தில, நண்பர்களுக்கு யாருக்காவது டாக்டர் முடியாது அவ்வளவு தான்னு சொல்லிட்டாங்களா? பயப்படாதீங்க, ஓரல் ராபர்ட் போல நீங்க திக்கி திக்கி பேசுறீங்களா? இதே மாதிரி வேற எந்த குறையோடோ, பெலவீனமோ உங்களுக்கு இருக்கா? உங்க ஆம்பிஷன் நடக்குமா? நடக்காதான்னு நினைச்சுட்டு இருக்கீங்களா? கவலைப்படாதீங்க, ஓரல் ராபர்ட்ஸ்ன் அக்கா ஜெபிச்ச மாதிரி நீங்களும் உங்க வீட்ல உள்ளவர்களுக்காக இயேசப்பா கிட்ட பிரையர் பண்ணுங்க, அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உங்களைத் தொட்டு குணமாக்குவார். மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத வியாதிகளும் சுகமாகும். மனுஷரால், மந்திரங்களால் சரிப்படுத்த முடியாததும் சரியாகும். என்ன குட்டீஸ் பிரையர் பண்ணுவீங்களா?

**ஜெபம்**

அன்புள்ள இயேசப்பா எனக்கு, என் நண்பர்களுக்கு
இருக்கிற இந்த தீராத வியாதியை சரிபடுத்துங்க.
எங்களுடைய ஆம்பிஷன் நிறைவேற உதவி செய்யுங்க.
உங்க வார்த்தையினால், தழும்புகளால் எங்களுக்கு
சுகம் தந்ததற்கு நன்றி, சுகமாகி உமக்கு நன்றியாய்,
சாட்சியாய் வாழ உதவி செய்யும் ஆமென்.


**மனப்பாடவசனம்**

அவர் தமது வசனத்தை அனுப்பி
அவர்களைக் குணமாக்கி, அவர்களை
அழிவுக்குத் தப்புவிக்கிறார். சங்கீதம் 107:20

சாட்சி பகுதி

# தேவனாலே எல்லாம் கூடும்

என் கணவரின் காலில் இருந்த புண் நீண்ட நாட்களாக ஆறாமல் இருந்து கொண்டேயிருந்தது. எவ்வளவு மருந்து மாத்திரை எடுத்தும் சுகமாகவேயில்லை. பணம் நிறைய செலவாகிக் கொண்டே இருந்தது. நான் மிகவும் சோர்ந்து போய் விட்டேன். இந்நிலையில் நான் தங்களின் ஊழியததிற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். அவர்களும் புண் ஆற பாரத்தோடு ஜெபித்தார்கள். தொடர்ந்து ஜெபித்ததின் பலனாக தேவன் அற்புதம் செய்தார். கால் புண் ஆறவும் பரிபூரண சுகம் பெறவும், மீண்டும் அலுவலகத்திற்குச் செல்லவும், சமாதானத்தினால் எங்கள் இருதயம் நிரம்பவும் தேவன் கிருபை செய்தார் அவருக்கே கோடான கோடி ஸ்தோத்திரம்.



**சகோதரி.சித்ரா – மதுரை**




நான் கடந்த 5 வருடங்களாக விவசாய லோனுக்கு முயற்சி செய்தேன். ஆனால் லோன் கொடுக்கும் மேனேஜர் நான் ஒரு கிறிஸ்தவள் என்று எனக்கு லோன் தரவே இல்லை. ஒவ்வொரு வருடமும் லோனுக்கு முயற்சி செய்வேன். என்னோடு முயற்சி செய்த எல்லாருக்கும் கிடைக்கு எனக்கு மட்டும் கிடைக்காது, என்னை மிகவும் அலட்சியமாகவே நடத்தினார், மிகவும் மனம் உடைந்து போனேன். ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது என்று கலங்கினேன். இயேசு வாழ்கிறார் ஊழியத்துடன் இணைந்து தினமும் 5 நிமிடம் ஜெபிக்கும் குழுவில் இந்த காரியத்திற்காக ஜெபிக்கச் சொன்னேன். தேவன் ஜெபத்திற்கு பதில் தந்தார். மனிதர்கள், சத்துருக்கள் செய்த தடைகளை உடைத்து தேவன் எனக்கு லோன் கிடைக்க கிருபை செய்தார். அவருக்கே கோடான கோடி ஸ்தோத்திரம்.

*சகோதரி.உமா மகேஸ்வரி — மதுரை*

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இந்த மாதத்திற்கான பென்சன் பணம் எனக்கு வரவில்லை. இதற்காக நான் கலெக்டர் ஆபீஸ் சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் இது விசயமாக பேசின போது அவர்கள் பேங்கில் போய் கேளுங்கள் என்றார்கள். பேங்க்கில் போய் கேட்டபோது மீண்டும் கலெக்டர் ஆபீஸ்க்கு போகச் சொன்னார்கள். மிகவும் மனம் உடைந்து போன நிலையில், இந்த மாதம் முன்றாவது சனிக்கிழமை மதுரையில் நடைபெறும் மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் நான் சாட்சி சொல்லுவேன் இயேசப்பா எனக்கு ஒரு அற்புதம் செய்யுங்க என்று நான் பொருத்தனை பண்ணிச் ஜெபித்தேன். தேவன் ஜெபத்தைக் கேட்டார். மீண்டும் பேங்கில் போய் கேட்டபோது மேனேஜர் சார் அன்றே எனக்கு பென்சன் பணம் வருவதற்கான அனைத்து வேலைகளையும் செய்து, எனக்கு பணம் கிடைக்கச் செய்தார். ஜெபத்தைக் கேட்டு, என்னை சாட்சியாக நிறுத்தின தேவனுக்கு கோடான கோடி நன்றி.

*சகோதரி.தங்கம் — மதுரை*



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ர நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# வறண்ட கண்கள்...

உங்கள் கண்கள் அடிக்கடி வீக்கமடைந்து, அரிப்பு, நீர் வடிதல் மற்றும் வெளிச்சத்தை பார்த்தால் அசௌகரியமாக உணர்தல் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகிறதா? உங்களுக்கு உலர் கண்கள் (Dry eye) பாதிப்பு இருக்க வாய்ப்புகள் அதிகம். இது ஒப்பீட்டளவில் தீங்கற்ற நோயாகும். மக்கள் தொகையில் 5% முதல் 40% மக்களை பாதிக்கிறது. இது தீவிரமான உடல் நலப்பிரச்சனை இல்லை என்ற போதிலும், உலர் கண்கள் நிலை ஏற்படும் போது மிகவும் அசௌகரியமாக உணர வைக்கும். உலர் கண் என்பது கண்களின் கண்ணீர் படலத்தை மாற்றியமைக்கும் தொடர்ச்சியான காரணங்களின் விளைவாகும். இந்தப் படலம் மூன்று அடுக்குகளால் ஆனது. ஒரு கொழுப்பு அடுக்கு, ஒரு நீர் அடுக்கு, மற்றும் ஒரு மியூகோசல் (சளி போன்ற ஒரு வஸ்து) அடுக்கு. கண்களின் கண்ணீர் படலத்தின் மூன்று அடுக்குகளில் பல காரணிகளால் மாற்றம் ஏற்படும். இது கண்கள் வறண்டு போக வழிவகுக்கும். கண்ணின் மேற்பரப்பை மென்மையாகவும் சுத்தமாகவும் பராமரிக்க மூன்று கூறுகளும் இணைந்து செயல்படுகின்றன. இந்த மூன்று அடுக்குகளில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், கண்கள் வறண்டு போகலாம்.

**கண்ணீர் படலம் எப்படி பாதிக்கப்படுகிறது? :** கண்ணீர் படலச் செயலிழப்புக்கு மிகவும் பொதுவான காரணமாக பார்க்கப்படுவது மீபோமியன் சுரப்பி செயலிழப்பு தான். இருப்பினும் ஆட்டோ இம்யூன் நோய்கள், சில மருந்துகளின் நுகர்வு போன்ற பிற காரணங்களும் உள்ளன. காண்டாக்ட் லென்ஸ்கள் பயன்படுத்துவது மற்றும் ஹார்மோன் மாற்றங்களால் கூட கண்ணீர் படல அடுக்குகள் பாதிக்கப்படலாம். மீபோமியன் சுரப்பிகள் கண் இமைகளில் அமைந்துள்ளன. கண்ணீர் படலத்தை உருவாக்கும் லிப்பிட்களை சுரக்கின்றன. அதை ஆவியாகாமல் தடுக்கின்றன. இந்தச் சுரப்பிகள் சரியாக வேலை செய்யாதபோது, கண்ணீர் அடுக்கு நிலையற்றதாகி, எதிர்பார்த்ததை விட வேகமாக மறைந்துவிடும், கண்ணீர் அடுக்கு மொத்தமாக பாதிக்கப் படுவதும் நிகழலாம் அல்லது குறைவான, தரமற்ற கண்ணீரைச் சுரக்கும் சூழலும் ஏற்படலாம்.

**உலர் கண் பிரச்சனை ஏன் ஏற்படுகிறது? :** உலர் கண் பிரச்சனை, ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில அறிகுறிகளுடன், கூடுதலான பாதிப்புகளையும் ஏற்படுத்தும். இவை பார்வை மங்கல், கண்கள் சிவத்தல், மற்றும் ஆகியவை. சுற்றுச்சூழலில் வறட்சி, காற்று அல்லது தூசி போன்ற வெளிப்புற காரணிகளால் இந்த அனைத்து அறிகுறிகளும் மோசமடையலாம். அதே போல் டிஜிட்டல் சாதன திரைகளை நீண்ட நேரம் பார்ப்பதாலும், மொபைல் பயன்படுத்துவதன் மூலமும் கண் வறட்சி நிலை மோசமாகும். நாம் கணினியை உற்றுப் பார்க்கும்போது நாம் கண் சிமிட்டும் எண்ணிக்கை குறைகிறது. கண் சிமிட்டுதல் என்பது கண்களைச் சுத்தப்படுத்தவும் கண்ணீரை சீராக விநியோகிக்கவும் தேவையான ஒரு செயலாகும். மேலும் கண் சிமிட்டுவது குறையும் போது கண்ணீர் அடுக்கின் ஆவியாதல் செயல்முறை வேகமடைகிறது. நடுத்தர வயதினர் உலர் கண்கள் பிரச்னையால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். பொதுவாக ஆண்களை விடப் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக மாதவிடாய் நிறுத்தத்தை நெருங்கும் பெண்களுக்கு கண்கள் எளிதில் வறண்டுப் போகிறது. ஏனென்றால் மீபோமியன் சுரப்பிகள் ஹார்மோன் மாற்றங்களால் பாதிக்கப் படுகின்றன, உலர் கண்கள் பிரச்சனைக்கான முக்கிய காரணிகள் தற்போதைய வாழ்க்கை முறையுடன் தொடர்புடையது. எனவே உலர் கண் பிரச்சனையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**உலர் கண் பிரச்னை ஏற்படாமல் தடுப்பது எப்படி? :** கண்களில் காற்று படுவதை தவிர்க்கவும், சுற்றியுள்ள காற்று மிகவும் வறண்டு இருக்கும்போது ஈரப்பதத்தைச் சேர்க்க ஈரப்பத மூட்டியைப் பயன்படுத்தவும், காட்சி கவனம் தேவைப்படும் நீண்ட நேரப் பணிகளைச் செய்யும்போது உங்கள் கண்களுக்கு அடிக்கடி ஓய்வு கொடுக்க வேண்டும், கண்ணீர் ஆவியாவதைக் குறைக்க வறண்ட சூழல்களில் உங்கள் கண்களை அடிக்கடி சிமிட்ட வேண்டும், கண்களை மூட வேண்டும். கண் இமைகளை உயர்த்தி பார்ப்பதை குறைக்க, கணினித் திரையை கண் மட்டத்திற்குக் கீழே இருக்குமாறு தாழ்த்தி வைக்கவும், புகைபிடிப்பதை விட்டுவிடுங்கள், மற்றவர்கள் புகைபிடிக்கும் போது அருகில் செல்லாதீர்கள். கண்களை உயவூட்டுவதற்கு செயற்கைக் கண்ணீர் அல்லது கண் சொட்டு மருந்துகளைப் பயன்படுத்தலாம். பிரிட்டனில் உள்ள தேசியச் சுகாதார சேவை, வெதுவெதுப்பான நீரில் நனைத்த துண்டை வைத்து கண் இமைகளை சுத்தம் செய்து, கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் லேசாக அழுத்தம் தர வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. இப்படிச் செய்வதால் கண்ணைச் சுற்றியுள்ள சுரப்பிகள் உற்பத்தி செய்யும் கொழுப்புகளைக் கரைக்க உதவுகிறது. சுரப்பிகளில் உள்ள கொழுப்புகளை வெளியே தள்ள உங்கள் விரல் அல்லது பருத்தியால் கண் இமைகளை மெதுவாக மசாஜ் செய்யவும் பரிந்துரைக்கின்றனர்.

**Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj**
**Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren**
**54,A.I.B.E.A-Nagar, Paravai, Madurai - 625402**
**Printed by: C.CHELLACHAMY, PRISM PRINTERS, Madurai**


அன்றன்றுள்ள அப்பம்
72வது திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
செப்டம்பர் 2024
5,6,7
இடம் : அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர் மாவட்டம்
வியாழன் காலை 5 மணி முதல் சனிக்கிழமை மதியம் 1 மணி வரை
Bro.வின்செண்ட் செல்வகுமார், Pr.ஆஸ்பார்ன் ஜெபத்துரை
சகோ.G.P.S.ராபின்சன், சகோ.எபனேசர்பால்,சகோ.L.வின்செண்ட்ராஜ்
தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறீர்கள்...
பதிவு கட்டணம் ரூ.200
தொடர்புக்கு : 98849 08777, 99626 48777


Advertisement
The Promised Land
Bible Studio
DISCOUNT
20% முதல் 50%
தள்ளுபடி
OFFER
வேதாகமங்கள், வசன போர்டுகள், Keychain, Mug மற்றும் Bottle.
இவை அனைத்தும் குறைந்த விலையில் இப்பொழுது thepromisedland.in
என்ற இணையத்தளத்தில் வாங்கி பயன் பெறுங்கள்
Online - www.thepromisedland.in என்ற இணையதளம் மூலமாக வாங்கலாம்
Courier மூலமாக வாங்க +91 7825 04 7825 என்ற எண்ணிற்கு வாட்சப்பில் தொடர்புக்கொள்ளுங்கள்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S

# NIGHT OF HOPE

# நம்பிக்கையின் இரவு

புதிய மாத ஆசீர்வாத
வாக்குத்தத்த ஜெபம்

LIVE
HD
நேரலை நிகழ்ச்சி

**31**
ஆகஸ்ட்
2024

இரவு
10.30 மணி
முதல்
12.30 மணி
வரை

தேவ செய்தியாளர்கள்

சகோதரர்
**L.வின்சென்ட்ராஜ்**

சகோதரி
**கலா வின்சென்ட்ராஜ்**



**உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்**
**உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்**

**அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் : 94428 00449**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

If Undelivered (Please Return To)
**YESUVAI THINAM PARKIREN**
54,A.I.B.E.A Nagar, Parvai,
Madurai - 625 402
South India.